Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.  112/2023

## Deposition of P.W.4

| | | |
|---|---|---|
| Name | : | மாரியப்பன் |
| Father's Name | : | தவசியப்பன் |
| Village | : | கல்லுவிடுதி |
| Religion | : | இந்து |
| Age | : | **40/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of  18.06.2024**
(3,4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 1,2,5 எதிரிகள் ஆஜர் இல்லை.  1,2,5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் கல்லுவிடுதி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் **2 1/2** வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மாலை சுமார் **5.00** மணியளவில் என் வீட்டிற்கு அருகில் வசிக்கும் முத்துசாமி என்பவரது வீட்டில் ஆடு திருடுபோனது சம்பந்தமாக சம்மட்டிவிடுதி அங்குவந்து விசாரித்து எழுதிக்கொண்டு சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். நானும் ராமசாமி என்பவரும் அ.சா.**1** முத்துசாமி வீட்டின் முன்பாக வைத்து சாட்சி கையொப்பம் செய்துகொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

அ.சா.1 முத்துசாமி எனது உறவினரா என்றால் இல்லை. ஊர்காரர். அ.சா.1 முத்துசாமியின் ஆடுகள் காணாமல்போனதாக சொல்லி அ.சா.1 முத்துசாமியுடன் புகார் அளிப்பதற்காக நான், ராமசாமி ஆகியோரும் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாக சொல்லி போலிசார் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. ஊரில் வைத்துதான் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். வேறு எங்கும் நான் கையொப்பம் செய்யவில்லை. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று படித்துபார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து கல்லுவிடுதியில் உள்ள டீக்கடை 1/2 கி.மீ. தூரத்தில் இருக்குமா என்றால்

350 மீ தூரம் இருக்கும். நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை